31st March 1964]

இவ்வகை மோசடியான கோரிக்கைகள் எழுப்பப்பட்டபோது, இராமநாதபுரம் வட்டாரத்தில் அலுவலிருந்தவர்களும், இக் கோரிக்கைகளைச் சிபாரிசு செய்தவர்களுமான கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் சீனியர் இன்ஸ்பெக்டர்கள் இவர்கள் மீது குற்றச் சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரத்தின் முன்னாள் துணைப்பதிவாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இரண்டு சீனியர் இன்ஸ்பெக்டர்களுக்குத் தண்டனையாக சம்பள உயர்வு ஆறு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் சம்பள உயர்வு பின்னால் தொடர்ந்து பாதிக்கப் படும். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் ரிபேட் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்த பெரும்பாலான சீனியர் இன்ஸ்பெக்டர்கள் இதற் கிடையில் மற்ற வட்டாரங்களுக்கு மாற்றப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 449 on page 748.]

(*a*) Yes.

(*b*) In 1959, complaints were received alleging that certain co-operative societies of weavers in Kadayanallur area in Tirunelveli made false rebate claims. The matter was reported to the Director of Handlooms. He recommended employing a Co-operative Sub-Registrar for a thorough investigation into these alleged bogus claims.

In February 1959, investigation by a Special Co-operative Sub-Registrar was ordered into the affairs of the following weavers' co-operative societies in the Kadayanallur area in Tirunelveli district with special reference to the working of the rebate scheme :—

1. Kadayanallur East Weavers' Co-operative Society.
2. Kadayanallur Ayyapuram Weavers' Co-operative Society.
3. Kadayanallur Hithaya Weavers' Co-operative Society.
4. Kadayanallur National Weavers' Co-operative Society.
5. Kadayanallur Pettai Weavers' Co-operative Society.
6. Kadayanallur Weavers' Co-operative Society, No. 1164.
7. Kadayanallur Central Weavers' Co-operative Society.
8. Kadayanallur Muthukrishnapuram Weavers' Co-operative Society.
9. Kadayanallur Parasuramapuram Weavers' Co-operative Society.
10. Melakadayanallur Weavers' Co-operative Society.

Pending investigation, claims of these societies for the period from February 1958 were not honoured.

The investigation revealed that the affairs of the first six Weavers' Co-operative Societies mentioned above were satisfactory and that no irregularities were noticed. However, the claims of the six weavers' co-operative societies were settled on the basis of "One-member-one-loom" and after taking into account, the average production per loom in the year in the area, as the average production per loom in the societies were found to be reasonable

[31st March 1964

when compared with average production per loom in Kadayanallur area. Government also ratified the action of the Director of Handlooms in having admitted the rebate claims of the above six weavers' co-operative societies.

2. In respect of the remaining four societies, the Co-operative Sub-Registrar (Inspection) recommended that such portion of the rebate claims which was found to be bogus might be disallowed. The amounts claimed by the societies, amounts sanctioned by the Director of Handlooms and the amounts rejected are furnished below :—

	Name of the Society.	*Rebate claimed.*		*Rebate sanctioned.*		*Rebate rejected.*	
	(1)	(2)		(3)		(4)	
		RS.	NP.	RS.	NP.	RS.	NP.
1	Kadayanallur Muthukrishnapuram Weavers' Co-operative Society.	61,239	33	36,499	45	24,739	88
2	Melakadayanallur Weavers' Co-operative Society.	34,362	35	16,496	00	17,866	35
3	Kadayanallur Central Weavers' Co-operative Society.	43,189	13	21,311	10	21,878	03
4	Kadayanallur Purasurampuram Weavers' Co-operative Society.	13,542	61	9,667	83	3,874	78
	Total ..	1,52,333	42	83,974	38	68,359	04

(அ) ஆம்.

(இ) 1959-ம் ஆண்டில் திருநெல்வேலி கடையநல்லூரில் சில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பொய்யான ரிபேட் கோரிக்கைகள் அனுப்பியிருப்பதாக புகார்கள் வந்தன. இவ்விஷயம் கைத்தறி டைரக்டருக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்தப் போலிக் கோரிக்கைகளை முற்றிலும் பரிசீலனை செய்யக் கூட்டுறவு துணைப் பதிவாளர் ஒருவரை நியமிக்கும்படி அவர் சிபாரிசு செய்தார்.

1959 பெப்ரவரியில் திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூரில் உள்ள கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்களின் விவகாரங்களை, முக்கியமாக ரிபேட் திட்டம் செயல் படுத்தப்பட்டதைக் குறித்து ஆராய ஒரு விசேஷத் துணைப்பதிவாளர் நியமிக்கப்பட்டார்:—

(1) கடையநல்லூர் கிழக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(2) கடையநல்லூர் அய்யாபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(3) கடையநல்லூர் இதய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(4) கடையநல்லூர் தேசீய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(5) கடையநல்லூர் பேட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(6) கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்க எண் 1164.

(7) கடையநல்லூர் மத்திய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(8) கடையநல்லூர் முத்துக்கிருஷ்ணபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

31st March 1964]

(9) கடையநல்லூர் பரசுராமபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

(10) மேல்கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

மேற்சொன்ன முதல் ஆறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விவகாரங்கள் திருப்திகரமாகவும் ஒழுங்காகவும் இருப்பதாக விசாரணையில் தெரிய வந்தது. எனினும், கடையநல்லூர் பகுதியில் தறி ஒன்றின் சராசரி உற்பத்தி திருப்திகரமாயிருப்பதாகத் தெரிந்தாலும், அந்த ஆண்டில் அப்பகுதியில் தறி ஒன்றுக்கு சராசரி உற்பத்தியைக் கணக்கிட்டும் இந்த ஆறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கைகள் "ஓர் உறுப்பினர்—ஒரு தறி" என்னும் அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட்டன. மேற்சொன்ன ஆறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ரிபேட் கோரிக்கைகளைக் கைத்தறி டைரக்டர் அனுமதித்திருப்பதையும் அரசினர் அங்கீகரித்துள்ளனர்.

(2) எஞ்சிய நான்கு சங்கங்களின் விஷயத்தில், ரிபேட் கோரிக்கையின் எந்தப் பகுதி போலியானது என்று தெரிகிறதோ அதைத் தள்ளிவிடலாமென்று கூட்டுறவு (மேற்பார்வை) துணைப் பதிவாளர் சிபாரிசு செய்தார். சங்கங்கள் கோரிய ரிபேட் தொகை, கைத்தறி டைரக்டர் அனுமதித்த ரிபேட் தொகை, கொடுக்க மறுக்கப்பட்ட ரிபேட் தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

சங்கத்தின் பெயர்.	கோரிய ரிபேட் தொகை.		அனுமதித்த ரிபேட் தொகை.		மறுக்கப்பட்ட தொகை.	
(1)	(2)		(3)		(4)	
	ரூ.	ந.பை.	ரூ.	ந.பை.	ரூ.	ந.பை.
1 கடையநல்லூர் முத்து கிருஷ்ணபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.	61,239	33	36,499	45	24,739	88
2 மேல் கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.	34,362	35	16,496	00	17,866	35
3 கடையநல்லூர் மத்திய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.	43,189	13	21,311	10	21,878	03
4 கடையநல்லூர் பரசுராமபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.	13,542	61	9,667	83	3,874	78
மொத்தம் ..	1,52,333	42	83,974	38	68,359	04

APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 460 on page 750.]

(*a*) **Yes.**

(*b*) (1) Increase in the quantum of dearness allowance and grant of educational and medical concessions on a par with those admissible to the Non-Gazetted Government Officers.